# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

## அரையாண்டுத் தேர்வு

## 2017 -2018

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. பின்வருவனவற்றில் பெரும் பொழுதில் இடம் பெறாதது

அ) நண்பகல் ☐ ஆ) கூதிர் ☐

இ) முன்பனி ☐ ஈ) கார் ☐

2. சோழமன்னன் கலிங்க நாட்டை வெற்றி கொண்ட போரைப் பற்றிக் கூறுவது

அ) புறநானூறு ☐ ஆ) குறுந்தொகை ☐

இ) கலிங்கத்துப்பரணி ☐ ஈ) அகநானூறு ☐

3. உயிர்முன் உயிர் புணர்தல் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மாவிலை ☐ ஆ) தமிழ்வழி ☐

இ) நீலவானம் ☐ ஈ) கடலலை ☐

4. கிழக்கிலிருந்து வீசும் காற்று

அ) கோடை ☐ ஆ) தென்றல் ☐

இ) கொண்டல் ☐ ஈ) வாடை ☐

5. கி.பி 6 தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்டவர்கள்

அ) சேரர் ☐ ஆ) சோழர் ☐

இ) பாண்டியர் ☐ ஈ) பல்லவர் ☐

6. அல்வழித்தொகை

அ) இரண்டுவகை ☐ ஆ) ஆறுவகை ☐

இ) எட்டுவகை ☐ ஈ) ஐந்துவகை ☐

7. கள்ளிச் செடி அதிகமாக வளரும் நிலம்

அ) பாலை ☐ ஆ) குறிஞ்சி ☐

இ) முல்லை ☐ ஈ) மருதம் ☐

8. மானம் என்பது

அ) செல்வத்தின் உயர்நிலை ☐ ஆ) வீரத்தின் உயர்நிலை ☐

இ) பொறுமையின் உயர்நிலை ☐ ஈ) அன்பின் உயர்நிலை ☐

9. ய் ர் ல் வ் ழ் ள் என்ற எழுத்துக் கூட்டம்

அ) மெல்லினம் ☐ ஆ) உயிரினம் ☐

இ) இடையினம் ☐ ஈ) வல்லினம் ☐

10. இந்திரவிழா கொண்டாடப்பட்ட நாட்கள்

அ) பதினெட்டு ☐ ஆ) இருபத்தெட்டு ☐

இ) பதினாறு ☐ ஈ) பன்னிரண்டு ☐

11. தமிழ்க்கல்விக்குள் ஆரியம் புகுந்த காலம்

அ) கடைக்கழகக் காலம் ☐ ஆ) இடைக்கழகக் காலம் ☐

இ) முதற்கழகக் காலம் ☐ ஈ) தலைக்கழகக் காலம் ☐

12. குறிப்புவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பாடியவன் ☐ ஆ) நெடியவன் ☐

இ) படித்த ☐ ஈ) பாடினான் ☐

13. முந்நீர் என அழைக்கப்படுவது

அ) கடல் ☐ ஆ) ஆறு ☐

இ) குளம் ☐ ஈ) கேணி ☐

14. வாளுடன் வடக்கிருந்து மானத்தைக் காக்க உயிர் நீத்த மன்னன்

அ) பெருஞ்சேரலாதன் ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐

இ) செங்குட்டுவன் ☐ ஈ) கரிகாற் பெருவளத்தான் ☐

15. அ இ உ எ ஒ என்பன

அ) உயிர்மெய்யெழுத்துகள் ☐ ஆ) குறிலெழுத்துகள் ☐

இ) சார்பெழுத்துகள் ☐ ஈ) நெடிலெழுத்துகள் ☐

16. ‘‘கிண்கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டு’’ என்னும் பாடல் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ☐ ஆ) பரிபாடல் ☐

இ) குறுந்தொகை ☐ ஈ) புறநானூறு ☐

17. ஐம்படைத்தாலியும் கழற்றாமல் தேர்த்தட்டில் நின்று போர்புரிந்த இளம்வீரன்

அ) நெடுஞ்செழியன் ☐ ஆ) இராசேந்திரன் ☐

இ) கரிகாலன் ☐ ஈ) நந்திவர்மன் ☐

18. ப் வ் என்பன

அ) இக்கால இடைநிலைகள் ☐

ஆ) நிகழ்கால இடைநிலைகள் ☐

இ) இறந்தகால இடைநிலைகள் ☐

ஈ ) எதிர்கால இடைநிலைகள் ☐

19. விசும்பு என்பது

அ) முகில் ☐ ஆ) கதிரவன் ☐

இ) வானம் ☐ ஈ ) நிலா ☐

20. தமிழ்நாட்டில் சமணமும் பௌத்தமும் வேரூன்றி இருந்த காலம்

அ) இறைநெறிக்காலம் ☐ ஆ) அறநெறிக்காலம் ☐

இ) பக்திநெறிக்காலம் ☐ ஈ ) தத்துவநெறிக்காலம் ☐

21. சினைப்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) கண் ☐ ஆ) மரம் ☐

இ) பொங்கல் ☐ ஈ ) சதுரம் ☐

22. தமிழரது சைவ வழிபாட்டில் வேள்வி செய்யும் முறையைப் புகுத்தியவர்

அ) களப்பிரர் ☐ ஆ) பாண்டியர் ☐

இ) ஐரோப்பியர் ☐ ஈ ) ஆரியர் ☐

23. தஞ்சைப் பெருங்கோவில் கட்டப்பட்ட நூற்றாண்டு

அ) கி.பி 13 ☐ ஆ) கி.மு 10 ☐

இ) கி.பி 14 ☐ ஈ ) கி.பி 10 ☐

24. 'முகமலர்' இது இடம்பெற்றுள்ள அணி

அ) தற்குறிப்பேற்றம் ☐ ஆ) உருவகம் ☐

இ) உவமை ☐ ஈ) உயர்வுநவிற்சி ☐

25. 'எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்' என்ற கவிதையை எழுதியவர்

அ) தாமரைக்கண்ணன் ☐ ஆ) சாலைஇளந்திரையன் ☐

இ) மன்னார் அமுதன் ☐ ஈ) அம்பி ☐

26. ஐம்பெருங்குழுவில் இடம்பெறாதோர்

அ) படைத்தலைவர் ☐ ஆ) பெற்றோர் ☐

இ) அந்தணர் ☐ ஈ) அமைச்சர் ☐

27. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 30 ☐ ஆ) 247 ☐

இ) 20 ☐ ஈ) 18 ☐

28. முதுகுடுமிப்பெருவழுதி ____________ மன்னன்.

அ) சோழ ☐ ஆ) சேர ☐

இ) பாண்டிய ☐ ஈ) ஈழ ☐

29. விழு என்ற வினையடியை வினையெச்சமாக மாற்றினால்

அ) விழுந்தான் ☐ ஆ) விழுந்தது ☐

இ) விழுந்து ☐ ஈ) விழுந்த ☐

30. செந்தமிழ் மொழியே நீ வாழ்க! இச் சொல்லியம்

அ) ஏவல் ☐ ஆ) வியங்கோள் ☐

இ) செப்பு ☐ ஈ) வினா ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

தாய் மண்ணை உயிருக்குயிராக நேசிக்கும் அவனுக்கு அனைவரும் தெரிந்தவர்கள் தான். ஐயமே இல்லை. அவனோடு ஒன்றாய்ப் புழுதி மண்ணில் விளையாடியவர்கள். கைகளில் புத்தகங்களும் கண்களில் கனவுகளுமாய் அவனுடன் கூடித் திரிந்தவர்கள். எங்கள் மண்ணில் வாழமுடியாது என்ற கரணியத்தால் வெளிநாடு செல்வதற்காகவோ அல்லது வேலை தேடியோ அல்லது திருமணத்திற்காகவோ கொழும்பிற்கு வந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவராக கோவிற் திருவிழாவில் தன் தாயைக் காணும் வாய்ப்பு அவனுக்கு ஒருநாள் கிடைத்தது. ''அம்மா! உங்களை விட்டுப்பிரிந்த ஆசை மகனம்மா நான்! என்னைத் தெரிகிறதா?'' என்று கத்திக் கூற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. தாயைக் கட்டியணைக்க வேண்டும்; அவரின் கையால் உணவு உண்ண வேண்டும்; அவருடன் நிறையப் பேச வேண்டும். இவ்வாறு தாய் அன்பு அவனைக் கொன்று கொண்டிருந்தது. அவன் ஆசைத் தங்கை நலமாக இருக்கின்றாளா? அண்ணாவிற்கு வேலை கிடைத்து விட்டதா? தந்தை தன்னை நினைத்து அழுகின்றாரா?அக்காவின் பிள்ளைகள் சின்ன மாமா எங்கே என்று கேட்கின்றார்களா? ஊரில் மழை பெய்கின்றதா? குளங்களெல்லாம் நிரம்பி வழிகின்றனவா? போன்ற கேள்விகள் பல அவன் மனத்தில் எழுகின்றன. அம்மாவின் மடியில் படுத்துத் தூங்க வேண்டும்; அம்மா தலையைக் கோதிவிடுவார்; அந்த இன்பத்தைத் தான் துய்க்க வேண்டும் என எண்ணி எண்ணி மாய்கிறான் அவ்விளைஞன். ஆனாலும், அவன் தன் தாயின் பார்வையிலிருந்து விலகி, மக்கள் கூட்டத்தினுள் மறைகிறான். கூடப்பிறந்த உறவைக் கண்டாலும் உயிராய்ப் பழகிய நண்பர்களைக் கண்டாலும் தூர விலகிச் செல்கிறான். தன் உணர்வுகளை அடக்கித் தாய்நாட்டின் விடுதலை என்ற இலக்கை நோக்கி நிலையான அமைதி கிடைக்கும் நாள் ஒன்றிற்காவே அவன் நடக்கிறான்.

1. இளைஞன் எவ் இலக்கை நோக்கி நடக்கிறான்?

2. ஊரைப்பற்றி அவன் மனத்தில் எழுந்த வினாக்கள் எவை ?

3. எந்நாளில் அவன் தன் தாயைக் காண்கின்றான்?

4. அவனுக்குத் தெரிந்தவர்கள் வாழ்ந்த ஊரை விட்டு வெளியேறியதன் கரணியம் யாது ?

5. எத்தகைய இன்பத்தைத் துய்க்க வேண்டும் என அவன் எண்ணுகிறான்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தமிழர் பொழுதை எத்தனையாக வகுத்தனர்? அவை எவை?

2. பழந்தமிழருடைய இயற்கை வாழ்விலே உழைப் பொழிந்த காலம் எது?

3. தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டிய மன்னன் யார்? அவனுடைய இயற்பெயர் என்ன?

4. "கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை" என்ற பாடலைப் பாடியவர் யார்? இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

5. குமரிமுனை தொடக்கம் இமயம் வரையுள்ள பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

6. எழுவரை வென்ற இளவலின் பெயர் என்ன? இவன் எழுவருடன் போர் புரிந்த இடம் எது?

7. போர்க்களத்தில் போரிட்ட சேரமன்னனையும் சோழமன்னனையும் புலவர் எவற்றிற்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார்?

புள்ளிகள் 10

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல், படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக.**
**அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

**அ.**



**ஆ.** தமிழனாய் வாழ்ந்து தலைநிமிர்வோம்
தமிழ்ப் பண்பாட்டுடனே நடைபயில்வோம்

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

அஃறிணை :- ______________________

வினையெச்சம் :- ______________________

வினைமுற்று :- ______________________

2. வினாவெழுத்துகள் எத்தனை? மொழிக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை?

______________________________________________

3. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் எத்தனை ? அவற்றின் வகைகளைத் தருக.

______________________________________________

4. பின்வரும் அணிகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

உவமையணி :- ______________________

தற்குறிப்பேற்ற அணி :- ______________________

5. அ.இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்?

______________________________________________

ஆ.இயற்சொல், திசைச்சொல் என்பவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

இயற்சொல் :- ______________________

திசைச்சொல் :- ______________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

தமிழருடைய பண்பாடுகளிலே சிறந்தவை மானம், விருந்தோம்பல், பிறருக்கு உதவுதல், இன்சொல் பேசுதல் போன்றனவாகும். இதில் இன்சொல் பேசுவது என்பது இனிய சொற்களைப் பேசுவதாகும். நாம் ஒருவரைக் காணும் பொழுது முகமலர்வுடன் இனிய சொற்களைப் பேச வேண்டும். இன்சொல் எம்மை மட்டுமன்றி பிறரையும் மகிழ்விக்கும். பிறர் மகிழ்வு எமக்கு மகிழ்ச்சியைத் தரும். எனவே, நாம் ஒவ்வொருவரும் இனிய சொற்களைப் பேசப் பழகிக்கொள்ள வேண்டும். எதுவும் தொடர் பயிற்சியினால் வரும் என்ற கருத்தை, ‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற பழமொழியினூடாக நமது முன்னோர் கூறியுள்ளனர். வன்சொல் பேசுவது என்பது தீய சொற்களைப் பேசுவதைக் குறிக்கும். நாம் ஒருவருடன் உரையாடும் போது தீய சொற்களில் பேசினால் அவரது முகம் வாடிவிடும். வன்சொற்களைப் பிறர் விரும்பமாட்டார். அது பிறருக்குத் துன்பத்தையே தரும். இன்சொற்கள் இருக்கும் பொழுது வன்சொற்களில் பேசுவது இனிய பழம் இருக்க, கசக்கும் காய்களைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும். இதை வள்ளுவரும் ‘இனியவை கூறல்’ என்ற அதிகாரத்தில் ‘‘இனிய உளவாக இன்னாது கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று’’ என்ற குறளினூடாக நாம் அனைவரும் இன்சொற்களைப் பேச வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, வன்சொற்களை விடுத்து இன்சொற்களைப் பேசி மகிழ்வோம். பிறரையும் மகிழ வைப்போம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் வீரம்
- ✸ உணவு உற்பத்தியும் உலகநாடுகளும்.
- ✸ வெளிநாட்டு வாழ்க்கை முறையும் தாயக வாழ்க்கை முறையும்.

புள்ளிகள் 20